**தலைப்பு 277 -மொனராகலை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

தலைப்பு 277 - மொனராகலை மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் தொடர்பான பொழிப்பு அறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபுர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மொனராகலை மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கு நேரொத்ததாக தயாரிக்கப்பட்டன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தினால் மற்றும் பிரதேச செயலகங்களினால் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காக 59 ஆம் இலக்க செலவுத் தலைப்பு தொடர்பாக ரூபா 36,243,028 செலவு செய்யப்பட்டு அச்செலவுகளுக்காக செலவுப் பேரேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவு செய்தல் தவறவிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செலவு விடயங்களை தொகுதிப்படுத்தி நியமப்படுத்தப்பட்டுள்ள முறைமையில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் பீ கணக்கு தொடர்பான இணக்க கூற்றுக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் திறைசேரி கணனி அச்சுக் குறிப்புக்களின் பிரகாரம் உச்ச செலவு எல்லை ரூபா 35,000,000 ஆக இருந்த போதிலும் திணைக்கள ஏடுகளின் பிரகாரம் ரூபா 35,395,000 ஆக இருந்ததனால் உச்ச செலவு எல்லையானது ரூபா 395,000 ஆல் மிகைத்திருந்ததடன் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் உரிய எல்லை மிகைத்தமை சம்பந்தமான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

**(இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 2,403,558,971 ஆக இருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட துணைப் பதிவேடுகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 2,403,947,171 ஆக இருந்ததுடன் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட ரூபா 388,200 தொகையான நிலையான சொத்துக்கள் துணைப் பதிவடுகளிலிருந்து நீக்கப்பட்டு காட்டப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப தவறுகளின் அடிப்படையில் தவறவிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களிலுள்ள தகல்களானவை துணைப்பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**(ஈ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/4 ஆம் இலக்க காணிகள் ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 1.3.4 ஆம் பந்தியின் பிரகாரம் மொனராகலை, தனமல்வில, கதிர்காமம் ஆகிய பிரதேச செயலகங்களினால் அரசாங்கத்தின் காணிகளை பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான நபர்களைப் பதிவு செய்யும் பதிவேடு நாளது வைரயாகப் பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட்டு சரியாகப் பேணப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் பீ கணக்கு தொடர்பான கூற்றுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் மரணமடைந்த 05 உத்திரோயகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 1,210,053 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,011,393 மொத்த தொகையான 02 கடன் மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட கடன் மீதியாகும். | சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் தொகையை விரைவில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சூரிய மின்வலு அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 60,284,140 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் சியம்பலான்டுவ சூரிய மின் பிறப்பாக்கிச் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 51,879,639 பெறுமதிக்கு ஒரு தனியார் கம்பனியுடன் 2022 ஆகஸ்ட் 03 ஆந் திகதி உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2023 பெப்ரவரி 17 ஆந் திகதி வரை உரிய ஒப்பந்த கம்பனிக்கு ரூபா 27,659,353 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கூறிய ஒப்பந்தம் 2022 திசெம்பர் 29 ஆந் தககிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் நியாயமான காரணமின்றி மிகுதியன நிர்மாணச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2023 பெ்பவரி 16 ஆந் திகதியளவில் நிர்மாண வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. | செயற்திட்டத்திற்குத் தேவையான எரிபொருளை வழங்குதல் மற்றும் சாதகமற்ற வானிலை நிலைமையின் காரணமாக செயற்திட்டத்தினைப் பூர்த்தி செய்தல் தாமதமடைந்திருந்தது. செயற்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்கு முடியாது போகுமாயின் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். | உடன்படிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய முதியோர் செயலகத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டின் கீழ் முதியோர் பகல் நேர கண்காணிப்பு நிலையத்தை நிரமாணிப்பதற்காக ரூபா 1,992,285 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் | இக்கட்டிடத்தினை குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவது தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கு முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் | கட்டிடத்தினை குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 2 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் கணக்காய்வுத் திகதியான 2022 நவம்பர் 15 ஆந் திகதி வரை குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ளன. | |
| (இ) | மஹாவலி, கமத் தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் சிறிய அளவிலான விவசாய தொழில்முயற்சி பங்குபற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெஹெர யாய ரன்லிய தொலழில்முயற்சி அபிவிருத்தி மன்றத்திற்கு ரூபா 1,925,569 உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதிக்கு நிலக்கடலை செயன்முறைப்படுத்தும் நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் 2022 நவம்பர் 15 ஆந் திகதியளவில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கட்டிடத்தினை ரன்லிய தொழில்முயற்சி மன்றத்திற்கு ஒப்படைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. | கட்டிடத்தினை எதிர்பார்த்த குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சமூர்த்தி, மனைப் பொரளாதார நுண்பாக நிதி, சுய தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டிக் கோவைளயின் பிரகாரம் சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்களை உருவாக்குதல், தொழில் வாய்ப்பின்மையைக் குறைத்தல், உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை பிரபல்யப்படுத்துதல் போன்ற குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் வெல்லவாய மற்றும் கதிர்காமம் பிரதேச செயலகங்களினால் ரூபா 5,479,380 செலவு செய்து உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளித்தல் | நாட்டில் காணப்பட்ட பாதகமான நிலைமையானது இதற்கான காரணமாகும். | தேவைப்பாடுகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நலன்பெறுனர்களை இனங்கண்டு உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மாத்திரம் இடம்பெற்றிருந்தும் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பாவற்றுடனான இணக்கமின்மைகள்

கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஒழுங்குவிதிகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

### கணக்காய்வு அவதானிப்புக்கள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | பெறுமதி ரூபா | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 03 ஆம் இலக்க மற்றும் 1974 இன் 40 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களால் திருத்தப்பட்ட 1969 இன் 07 ஆம் இலக்க அரசாங்கத்தின் வீட்டு உரிமைகளை மீளப் பெற்றுக்கொள்ளல் அதிகாரச் சட்டம். | - | உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைந்திருந்தும் மீள ஒப்படைக்கப்படாத அரசாங்கத்தின் 03 வீடுகளை தொடர்புபட்ட அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் மீளப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 64/4 ஆம் இலக்க உத்தியோகபூர்வ வீட்டினைப் பொறுப்பேற்பதற்கான பிஸ்கால் கட்டளைகளை அமுல்ப்படுத்துவதற்கு 2023 ஏப்ரல் 26 ஆந் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 28/59 ஆம் இலக்க வீடு பொறுப்பேற்க்கப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகபூர்வ வீடுகனளை துரிதமாக ஒப்படைக்குமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | அதிகாரச் சடட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அரசாங்க வீடுகள் மீளப் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும். |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை ............................

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104 (4) | 541,250 | நட்டம் ஏற்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற 06 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குழு அறிக்கை கிடைத்துள்ளதுடன் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 206 (1) | 1,204,667 | வைப்புக்களை கொடுப்பனவு செய்வதற்காக அனைத்து வவுச்சர்களும் இரண்டு உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மாவட்ட செயலகத்தினால் அவ்வாறு இரண்டு உத்தியோகத்தர்கள் சான்றுபடுத்தாது கொடுப்பனவு செய்திருந்த சந்தர்ப்பங்கள் | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 237(அ)(i) மற்றும் (ஆ) | 11,738,374 | மாவட்ட செயலகம், கதிர்காமம் மற்றும் புத்தள பிரதேச செயலகங்கள் என்பவற்றினால் கொள்வனவு செய்வதற்காக கொடுப்பனவு செய்யும் போது அலுவலகத்திற்கு கிடைத்திருக்காத பொருட்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். நாட்டில் காணப்பட்ட பாதகமான நிலைமையினால் தீவிரமாக பொருள் தட்டுப்பாடு நிலவியதனால் இந் நிலைமை உருவாகியது. | நிதிப்பிரமாண அறிவுறுத்தலகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 1646 | - | 08 பிரதேச செயலகங்களுக்குரிய 30 வாகனங்கள் 2022 சனவரி மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான ஓட்ட அட்டவணைகளை 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. | 08 பிரதேச செயலகங்கன் 30 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணைகளை துரிதமாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப்பிரமாணத்ததின் பிரகாரம் ஓட்ட அட்டவணைகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை .............................. | | | | | |
| | (i) | XIX ஆம் அத்தியாயத்தின் 6.2 ஆம் பந்தி | 189,000 | அரசாங்கத்தின் ஒரு வீட்டினை ஒரு அரசாங்க உத்தியோகத்தருக்கு மாத்திரம் ஒதுக்கீடு செய்ய கூடியதாக இருந்த போதிலும் அதற்கு இணக்கமின்றி 28/49 ஆம் இலக்க அரசாங்க வீடு 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதியிலிருந்து மாதாந்தம் ரூபா 3,000 வாடகைக்கு தற்காலிகமாக குடியிருப்பதற்காக ஒரு தனியார் நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற ஒரு பொறியியலாளர் குடியிருப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது. | இந்த நிர்மாணக் கம்பனியின் வேண்டுதலின் அடிப்படையில் வீட்டுக் குழுவின் அங்கீகாரத்துடன் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அரசாங்க நிருவாக சுற்றறிக்கை ............................ | | | | | |
| | (i) | 2006 யுலை 14 ஆந் திகதிய 11/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை | | நாளாந்த ஓட்ட அட்டவணைக்குப் பதிலாக சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 02 இன் பிரகாரம் ஒரு அட்டவணை | இரண்டு வாகனங்னகளுக்காக 2023 ஆம் ஆண்டின் போது ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மொனராகல | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரமான நாளாந்த ஓட்ட அட்டவணைக்குப் பதிலாக உரிய படிவத்தின் பிரகாரமான ஓட்ட |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | பேணப்பட வேண்டிய போதிலும் 5 உத்தியோகபுர்வ வாகனங்கள் சம்பந்தமாக அந்த அட்டவணை பேணப்பட்டிருக்கவில்லை. | மெதகம, பிபில ஆகிய பிரதேச செயலகங்களினால் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அட்டவணைகளைப் பேணி கணக்காய்விற்ச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| | (ii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் I ஆம் பந்தி | | நிறுவனத்தின் பதவியணியினரின் செயலாற்றலினை மேம்படுத்துவதற்கதாக நிறுவனத்தில் சேவையில் ஈடுகபட்டுள்ள அனைத்து பதவியினர்களும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிட வேண்டிய போதிலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 சனவரி மாதத்தில் செயலாற்றல் உடன்படிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் பதவியினர்கள் செயலாற்றல் உடன்படிக்கையினை மெற்கொள்ளுதல் வேண்டும். |
| (உ) | 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை ........................ | | | | | |
| | (i) | 8.9.1(ஆ) பந்தி | 48,664,675 | ரூபா 500,000 இன மிகைத்த பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக | எதிர்காலத்தில் முறைப்படியாக ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டு கொள்வனவு செய்தலினை | பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | முறைப்படியான ஒப்பந்த உடன்படிக்கையானது எழுதப்பட்டு கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செய்லகம் மற்றும் வெல்லவாய, கதிர்காமம், மெதானராகல, புத்தள பிரதேச செயலகங்களினால் உரிய பெறுமதியினை மிகைத்து கொள்வனவு செய்யப்பட்டவைகளுக்காக முறைப்படியாக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்வேன். | |
| (ii) | 1.3.2 ஆம் பிரிவு | 3,076,820 | கதிர்காமம் பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்தல்களை மேற்கொள்ளும் போது பெறுகை நடைமுறைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் நேரடிக் கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பேன். | பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டி மற்றும் அவை | 51,800,044 | பிராந்திய பெறுகை குழுவின் பொருள் பெறுகை நடவடிக்கைகளுக்கான அதிகார எல்லையானது | கதிர்காமம் பிரதேச செயலகத்தின் பாய்ச்சல் நீர் மற்றும் தெளித்தல் நீர் முறைமையை கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்பான திருத்தங்கள் | ரூபா 1 மில்லியனாகவும் திணைக்கள பெறுகைக் குழுவின் வழங்கல் நடவடிக்கைகளுக்கான அதிகார எல்லையானது ரூபா 10 மில்லியனாகவும் இருந்த போதிலும் அந்த எல்லைகளை மிகைத்து தமாவட்ட செயலகம் மற்றும் வெல்லவாய, கதிர்காமம், மொனராகல, புத்தள ஆகிய பிரதேச செயலகங்களால் உபகரணங்களை கொள்வனவு செய்தலானது உப பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 1989,814 செலவுகளை ஏற்றுக்கொள்கிறேன். வெல்லவாய பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்த 29 தானியம் அரைக்கும் இயந்திரங்களை கொள்வனவு செய்தமைக்கான ரூபா 1,991,000 தொகைக்காக மாவட்ட பெறுகைக் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கொள்வனவு செய்துள்ளேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பிரதிபலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மொனராகல பிரதேச செயலகத்தினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்ட சௌபாக்கிய உற்பத்திக் | கொள்வனவாளர்களை அழைத்து வருவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தல்கள் | கோமாரிகா இலை உற்பத்தியினை சந்தைப்படுத்துவதற்காக ஒரு சந்தையினை அறிமுகப்படுத்துவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | கிராமங்கள் நிகழ்சித்திட்டங்களின் கீழ் கோமாரிகா பயிர்ச் செய்கை செயற்திட்டத்திற்காக ரூபா 3,776,390 செலவு செய்யப்பட்டிருந்தது. கோமாரிகா நாற்றுக்களை கொள்வனவு செய்து பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 1,697,090 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் கோமாரிகா இலை உற்பத்தியின் விளைச்சலை அறுவடை செய்யும் காலம் வந்திருந்தும் இலைகளின் விளைச்சலை கொள்வனவு செய்வதற்கு கொள்வனவாளர்கள் இல்லாமையாலும் சிறந்த விளைச்சல் இல்லாமையாலும் விவசாயிகள் பயர்செய்கையை கைவிடுவதற்கு விரும்பியிருந்தார்கள்<br><br>மேலும் பங்கசு நோய்களின் போது கோமாரிகா இலைகள் அழிவடைந்து போகின்ற தன்மை காணப்பட்டது என அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அறிக்கைகள் மற்றும் வெளிக்கள கணக்காய்வு பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்டது. | வழங்கப்பட்டுள்ளன. | பயிர்ச் சேதங்களை தவிர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கிராமசக்தி மக்கள் தொழில் முயற்சியின் கீழ் காணப்படுகின்ற நிதியத்தினைப் பரீட்சித்த போது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களில் 125 கிராம சக்தி மக்கள் சங்கங்கள் காணப்பட்டதுடன் அச்சங்கங்களின் வங்கி கணக்குகளில் ரூபா 81,968,386 பணம் விளைவற்றுக் காணப்பட்டது. | நிதியினை மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு தெரியப்படுத்தியுள்ளேன். | அரசாங்கத்தின் நிதியை வினைத்திறனதாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் புத்தள பிரதேச செயலகத்தினால் முதியோர் படிகள் மற்றும் கர்ப்பிணித்தயர்மார்களுக்கான ஊட்டச்சத்து படிகளை கொடுப்பனவு செய்யும் போது ரூபா 1,101,900 தொகை நலனாளிகளுக்கு வழங்கப்படாது 2022 திசெம்பர் 31 ஆந் திகதி மதாவட்ட செயலகத்திற்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. | மிகுதிப்பணத்தை அந்த மாதத்திலேயே பெற்றுக்கொள்வதற்கு தேசிய முதியோர் செயலக பணிப்பாளரின் NSENDVEN03/01/01 ஆம் இலக்க 2022 திசெம்பர் 06 ஆந்திகதிய கடிதத்தில் அறிவுறுத்தல் கிடைத்திருந்தது. | நலன்பெறுனர்களை சரியாக இனங்கண்டு தேவையான அளவிற்கு பணத்தைப் பெற்று நலன்பெறுனர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கிராமிய பொருளாதார பியிர்ச் செய்கை மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொனராகல மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 302 நலன் பெறுனர்களுக்கு பெரும்போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக 2754 கிலோ கிராம் பாசிப்பயறு மற்றும் உளுந்து விதைகளை கொள்வனவு செய்வதற்கு மாவட்ட செயலகத்தினால் ரூபா 2,889,120 செலவு செய்யப்பட்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட காலத்தை கடந்து விதைகள் வழங்கப்பட்டதனால் தனமல்வில மற்றும் சியம்பலாண்டுவ பிரதேச செயலகங்களில் 80 நலன் பெறுனர்கள் ரூபா 331,170 பெறுமதியான 317.265 கிலோ கிராம் பாசிப்பயறு மற்றும் உளுந்து விதைகளை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொண்டிருக்கவில்லை. | சியம்பலாண்டுவ பிரதேசப் பிரிவில் 2022/23 பெரும் போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பாசிப்பயறு மற்றும் உளுந்து விதைகள் வழங்கவேண்டியிருந்தது. தற்பொழுது அந்த விதைகள் பயிரிடப்பட்டுள்ளன.<br><br>தனமல்வில பிரதேசப் பிரிவில் தாமதித்து விதைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதனால் நலன்கெபறுனர்கள் அந்த விதைகளை பயிரிடப்படாதுள்ளதுடன் ஐந்து விவசாயிகளின் பியிர்ச் செய்கை வெற்றியளித்திருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பயிர்ச் செய்கைக்குத் தேவையான விதைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மரபுரீதியான மற்றும் கிராமிய கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்டம் - 2021 இன் கீழ் மொனராகல பிரதேச செயலகத்தினால் கொலன்வின்ன பன் கைத்தொழில் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 2,390,641 செலவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் ரூபா 853,000 மதிப்பீட்டில் பன் கைத்தொழிலாளர்களின் தயாரிப்புக்களை சந்தைப்படுத்தும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காதகத் திட்டமிடப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் 20 ஆம் திகதி வரை உரிய காணியை அளவீடு செய்வதற்காக வேண்டுகோள் விடுத்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. | இந்த வேண்டுதலினை துரிதமாக நிறைவேற்ற முடியாது என நிலஅளவைத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் நிதியை வினைத்திறனாகவும் ஆக்கபுர்வமாகவும் பயன்படுத்தி மக்களை வெற்றிபெறச் செய்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தின் வாகன பதிவேட்டில் உள்ளடக்கப்படபாத 06 வாகங்கள் விபத்துக்குள்ளாகியமை அல்லது ஏனைய காரணங்களினால் ஓடுவதிலிருந்து நீக்கப்பட்டு அலுவலக வளவுக்குள் அழிவடைந்து காணப்படுவதுடன் உத்தியோகத்தர்களுக்கு | 02 வாகனங்கள் சம்ந்தமாக வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. 150-1638 ஆம் இலக்க மோட்டார் சைக்களின் பதிவினை இரத்துச் செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 02 மோட்டார் சைக்கிள்கள் சுகாதார பெருந்தெருக்கள் மற்றும் சமுக சேவைகள் அமைச்சிற்கும் திட்ட | வாகனங்கனளின் உரிமையை சரியாக இனங்கண்டு முறைப்படியாக கைதவிர்ப்புச் செய்வதற்கும் தேமாட்டார் சைக்கிள்களின் பகுதிகளின் பகுதிகள் காணாமல் போனமை சம்பந்தமாக துரிதமாக விசாரணைகளை |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்படைக்கப்பட்ட 06 மோட்டார் சைக்கிள்கள் மாவட்ட செயலகத்திற்கு மீள ஒப்படைத்ததன் பின்னர் அந்த மோட்டார் சைக்கிள்களின் பகுதிகள் காணாமல் போயிருந்தன. அந்த விடயம் சம்பந்தமாக பெறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமுலாக்கல் அமைச்சிற்கும் சொந்தமானவையாகும். | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தின் ஆவணப்படுத்தப்பட்ட ஓடும் நிலையில் காணப்படாத மற்றும் திருத்தம் செய்தல் பொருளாதார ரீதியாக வினைத்திறனற்ற 08 வாகனங்கள் சம்பந்தமாக ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 04 மோட்டார் சைக்கிள்கள், 01 தண்ணீர் பௌசர், 02 பெஜ்ரோ ஜீப்கள், 01 டபிள்கெப் வாகனம் என்பவற்றை கைதவிர்ப்புச் செய்வதற்காக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இலக்க தகடுகள் இல்லாத கெப் வாகனத்திற்காக வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. லொறி மற்றும் பௌசருக்கான பதிவு செய்தல் சான்றிதழினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன்கள் கடைக்கும் வகையில் வாகனங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரையான காலத்தில் மாவட்ட செயலகம் வீட்டு வாடகையை குறைத்து அறவிட்டதன் காரணமாக 58 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 708,030 தொகையான வீட்டு வாடகையானது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னும் நிலுவையாகக் காணப்பட்டது. | 2023 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மதாதங்களில் அறவிடப்பட்ட பணம் ரூபா 69,999 ஆகும். இன்னும் அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 638,056 ஆகும். | நிலுவையான வீட்டு வாடகைகளை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கதிர்காமம், மொனராகல, வெல்லவாய ஆகிய பிரதேச செயலகங்கள் 2019 இலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,588,473 பெறுமதியான 1,411 அலகு பொருட்கள் கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் வரை உரிய நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | கதிர்காமம் பிரதேச செயலகம் - ஏற்றுக்கொள்கிறேன். தற்பொழுது சீலர் இயந்திரம், கேஸ் அடுப்பு, பிலன்டர் என்பன நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய உபகரணங்களை மிக விரைவாக நலன் பெறுனர்களுக்கு பகிர்ந்தளிப்பேன். மொனராகல பிரதேச செயலகம்- தேர்தல் காலப்பகுதியின் பின்னர் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தேவைப்பாட்டினை நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு இனங்கண்டு பெருட்களை கொள்வனவு செய்வதற்கும் நலன்பெறுனர்களுக்கு பொருத்தமான பொருட்களை பகிர்ந்தளிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 22 ஆம் திகதியளவில் மொனராகல பிரதேச செயலகத்தில் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வழங்கப்பட்ட 69 காணி அதிகாரப் பத்திரங்களும் (அனுமதிப்பத்திரங்கள்) 2014 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வழங்கப்பட்ட 50 வெகுமதிப்பத்திரங்களும் உரிய வெகுமதி பத்திரதாரர்கள்/ அதிகார பத்திரதாரர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. | காணி கச்சேரியின் போது வெகுமதி பத்திரதாரர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வெகுமதிப்பத்திரங்களையும் அதிகாரப் பத்திரங்களையும் தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வெல்லவாய பிரதேச செயலகத்தின் 29 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அதிகார பத்திர காணிகளுக்காக 2543 வெகுமதிப்பத்திரங்களை தயாரிப்பது தொடர்பாக 2015 இலிருந்து 2019 வரையான ஆண்டுகளில் மொனராகல சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் | இந்த நில அளவை வேண்டுதல் சம்பந்தமாக ஞாபகப்படுத்தல் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பின்தொடர் நடவடிக்கை எடுத்து நிலஅளவைச் செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகத்திற்கு நில அளவை வேண்டுதல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் 2022 நவம்பர் 15 ஆம் திகதி வரை அந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அதற்காக அந்த வேண்டுதல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்ட திகதியின் பின்னர் பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | புத்தள பிரதேச செயலக பிரதேசத்தினால் ஓய்வுதியத்தினை செலுத்தும் போது பத்து ஓய்வுதிய காரர்களுக்கு மெத்தமாக ரூபா 2,084,790 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பணத்தில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை இன்னும் ரூபா 1,168,365 அறவிட வேண்டியிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். மிகையாகச் செலுத்திய பணத்தை மீண்டும் அறவீடு செய்தல் இடம்பெற்றுள்ளது. | மிகையாகச் செலுத்தி பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகையாகச் செலத்துதல் சம்பந்தமாக பெருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | காணி ஆணையாளர் நாயகத்தின் 2016 யுலை 14 ஆந் திகதிய அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் விலாசமிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் காணித் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையின் (eslim) காணி தொடர்பான தரவுகள் 2016 ஒக்தோபர் மாதமளவில் சேகரித்து முடிவுறுத்தப்பட வேண்டுமென்று இலக்கு வழங்கபர்பட்டிருந்த போதிலும் கதிர்காமம் பிரதேச செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டின் பின்னரும் மொனராகலை பிரதேச செயலகத்தினால் 2016 ஆம் ஆண்டின் பின்னரும் இந்த முறைமை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | காணி தொடர்பான தரவுகளை சேகரித்து தகவல் முறைமையானது நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | 1979 இன் 07 ஆம் இலக்க அரசாங்க காணிகளை பயன்படுத்தும் உரிமையை மீளப் பெற்றுக்கொள்ளும் | அதிகாரமின்றி பிடித்து வைத்துள்ள காணியானது உறுதியாக ஒரு அரசாங்க காணியாக | காணிகளின் பயன்படுத்தும் உரிமையை மீளப் பெற்றுக்கொள்வதற்கு துரிதமாக நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரச் சட்டம் தொடர்பான கட்டளை இலக்கம் 179 இற்கு இனங்க வேளியேற்றும் அறிவித்தலின் மூலம் புத்தள பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 03 அரசாங்க காணிகளின் தெளிவான பயன்படுத்தும் உரிமையை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2023 சனவரி 31 ஆம் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இருக்குமாகவிருந்தால் அரசாங்க காணிகளை பயன்படுத்தும் உரிமையை மீளப் பெற்றுக்கொள்ளும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வேன். | எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன..

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | மொனராகல மாவட்ட செயலகத்தினதும் 11 பிரதேச செயலகங்களினதும் அங்கீகரித்த பதவியணியினர் விபரத்தின் பிரகாரம் பதவி நிலைத்தரத்திலுள்ள 14 பதவிகள் மூன்றாந் தரத்திலுள்ள 19 பதவிகள், இரண்டாந் தரத்திலள்ள 156 பதவிகள் மற்றும் ஆரம்ப தரத்திலுள்ள 17 பதவிகளுமாக மொத்தமாக 206 பதவிகள் 2022 திசெம்பர் 31 அளவில் வெற்றிடமாகக் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் விபரத்தின் பிரகாரம் 05 பிரதேச செயலகங்களின் 02 ஆம் தரத்திலுள்ள 215 ஊழியர்களும் ஆரம்ப தரத்திலுள்ள 02 ஊழியர்களும் அங்கீகரித்த பதவியணியினரை மிகைத்து மிகையாக காணப்பட்டனர். | உத்தியோகத்தர்கள் வருடாந்தம் இடமாற்றம் வழங்கும் போது இந்நிலைமை தவிர்க்கப்படும். | மிகையான உத்தியோகத்தர்களை இடமாற்றுவதன் மூலம் பதவியனியில் சமனிநிலை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றிக்கையின் பிரகாரம் ஆகக் கூடிய காலம் 05 ஆண்டுகள் ஒரே பதவியில்/ சேவை நிலையத்தில் சேவையாற்றியுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்கு வாய்ப்பளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய போதிலும் மொனராகல மாவட்ட செயலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள 30 உத்தியோகத்தர்களுக்கும் 11 பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள 896 உத்தியோகத்தர்களும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 06 ஆண்டுகளிலிருந்து 32 ஆண்டுகள் வரையான காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | உத்தியோகத்தர்கள் வருடாந்தம் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்திருந்தும் பல உத்தியோகத்தர்களுக்கு வருடாந்தம் இடமாற்றம் கிடைத்திருக்கவில்லை. | அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் இடமாற்றத்தினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |